ந.க.எண்.16214/2008/ஆ5

பேரூராட்சிகளின் ஆணையரகம்
குறளகம், சென்னை–108

நாள் : 29.08.08

**சுற்றறிக்கை**

பொருள் பணிகள்–பேரூராட்சிகள் நிர்வாகம் – பொது நிதிப்பணிகள் – மேற்கொள்ளுதல் – ஒரே பணிக்கு பல்வேறு வேலைகளுக்காக– தனித்தனி மதிப்பீடுகள் பிரித்து தயாரித்தல்–பேரூராட்சி நிதியை தவறாக பயன்படுத்துதல்–நிர்வாக அனுமதி/அனுமதி வழங்குதல் அரசாணையை மீறி செயல்படுதல் – அறிவுரைகள் வழங்கப்படுதல்–சார்பு

பார்வை 1) பேரூராட்சிகளின் ஆணையர், பல்வேறு ஆய்வுக் கூட்டங்களில் வழங்கிய அறிவுரைகள்

2) அரசாணை (ப) எண் 166 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12.04.08

3) பேரூராட்சிகள் ஆணையரக கடிதம் நே.மு.க.எண் 1594/2008/உ3 நாள் 23.04.08

பேரூராட்சியின் பொது மற்றும் இதர திட்டங்களின் கீழ் பணிகள் மேற்கொள்ளுவதற்காக பேரூராட்சிகளின் ஆணையர், அவ்வப்போது நடத்திய ஆய்வுக் கூட்டங்களின் போது விரிவான அறிவுரைகள் மற்றும் தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக பேரூராட்சிகளின் பொது நிதியில் மேற்கொள்ளப்படும் பணிகளை வேறொரு திட்ட நிதியில் சேர்த்து செய்யும் பொழுது அப்பணிக்கான மொத்த மதிப்பீடு கீழ்கண்ட அளவில் இருக்க வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

1. பூங்காக்கள் அமைத்தல் – ரூ.15.00 லட்சம் வரை
2. அலுவலக கட்டிடம் கட்டுதல் – ரூ.20.00 லட்சம் வரை
3. உரப்பூங்கா அமைத்தல் – ரூ.10.00 லட்சம் வரை
4. சமுதாயக்கூடம்/திருமண மண்டபம் – ரூ.20.00 லட்சம் வரை
5. எரிவாயு தகனமேடை அமைத்தல் – ரூ.40.00 லட்சம் வரை

மேலும் பேரூராட்சிகளில் பொது நிதி மற்றும் இதர திட்டங்களின் கீழ் பணிகள்

மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி வழங்கும் அதிகார வரம்பினை உயர்த்தி பார்வை 2ல் காணும் அரசாணையில் கீழ்கண்டவாறு உத்திரவிடப்பட்டுள்ளது

| நிர்வாக அனுமதி – நிதி வரம்பு | | |
|---|---|---|
| பேரூராட்சி மன்றம்/அலுவலர் | நிலை 1, நிலை 2, | தேர்வு நிலை/சிறப்பு நிலை |
| பேரூராட்சி மன்றம் | 4.00 லட்சம் | 8.00 லட்சம் |
| உதவி இயக்குநர் | 20.00 லட்சம் | 20.00 லட்சம் |
| மாவட்ட ஆட்சியர் | 30.00 லட்சம் | 30.00 லட்சம் |
| பேரூராட்சிகளின் ஆணையர் | 300.00 லட்சம் | 300.00 லட்சம் |
| அரசு | 300.00 லட்சத்திற்கு மேல் | 300.00 லட்சத்திற்கு மேல் |
| தொழில் நுட்ப அனுமதி – நிதி வரம்பு | | |
| உதவி பொறியாளர்/இளநிலை பொறியாளர் | | 5.00 லட்சம் |
| உதவி செயற்பொறியாளர் | | 20.00 லட்சம் |
| செயற்பொறியாளர் | | 40.00 லட்சம் |

அதன்படி திட்டப்பணிகளை மேற்கொள்ளுவதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கவும் நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி ஆகியவற்றை மேற்படி அரசாணையில் வழங்கிய அதிகாரங்களின்படி செயல்பட பார்வை 3ல் காணும் இவ்வாணையரக கடிதத்தில், அறிவுறுத்தப்பட்டது.

சில பேரூராட்சிகளில் ஒரே இடத்தில் ஒரே பணியை பொது நிதி அல்லது இதர திட்டங்களின் கீழ் பல மதிப்பீடுகள் தயாரித்து மேற்கொள்வதும், மேலே படிக்கப்பட்ட அரசாணையில் வழங்கப்பட்ட விதிகளுக்கு முரணாகவும், ஒளிவு மறைவற்ற ஒப்பந்த விதிகளுக்கு முரணாகவும், தொழில் நுட்ப அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மீறியும், ஒப்பந்தங்கள் கோராமல் தன்னிச்சையாக பணிகள் மேற்கொள்ளவதும், இவ்வாணையரகத்தின் கவனத்திற்கு வந்துள்ளன. சில பேரூராட்சிகளில் ஒரு குறிப்பிட்ட பணிக்காக, குறிப்பிட்ட மதிப்பிற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட பின்னர் அதே பணிக்கு, பொது நிதியில் அல்லது இதர திட்டங்களின் கீழ் பல மடங்கிற்கு அதிகமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, பணிகள் மேற்கொண்டதும், இவ்வாணையரகத்தின் கவனத்திற்கு வந்துள்ளன. உதவி இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியர் வழங்க வேண்டிய நிர்வாக அனுமதியினை மதிப்பீடுகளை பிரித்து, பேரூராட்சி மன்றத்தின் நிர்வாக அனுமதியினை பெற்று செயல்படுத்துவதும். செயற்பொறியாளர் வழங்க வேண்டிய தொழில் நுட்ப அனுமதியினை மதிப்பீடுகளை பிரித்து உதவி செயற்பொறியாளர் தொழில்நுட்ப அனுமதி வழங்குவதும் மேற்குறிப்பிட்ட அரசாணைக்கு முரணானது மட்டுமின்றி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார வரம்பினை மீறி செயல்படுவதாகும். பேரூராட்சியில் உபரி நிதியிருப்பு உள்ளதால் ஒரே இடத்தில் ஒரே இனத்திற்கு தேவையற்ற பணிகளை மேற்கொள்வதற்காக நிதியினை விரயம் செய்வதால் பேரூராட்சியின் இதர பகுதிகளுக்கு ஒரே சீரான வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தாத நிலை ஏற்படுகிறது. பேரூராட்சியின் அனைத்து பகுதிகளுக்கும் ஒரே சீரான வளர்ச்சி அடையும் வகையில் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட வேண்டும். மேலும் பேரூராட்சியின் பொது நிதி அல்லது இதர திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் சாலைப்பணிகள் பூங்கா அமைத்தல், வருவாய் தரத்தக்க இனங்களுக்கான கட்டிடங்கள் கட்டுதல் போன்ற அனைத்து பணிகளுக்கும் இத்தகைய விதிகள் பின்பற்றப்பட வேண்டும். உதவி பொறியாளர்/ இளநிலை பொறியாளர்கள் குறிப்பிட்ட பணிகளுக்கான மதிப்பீடுகளை தயாரிக்கும் பொழுது, அப்பணியினை மேற்கொள்ளும் இடத்தினை, தல ஆய்வு செய்து இடத்தின் நிலை (Site condition) தேவையான அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொண்டு அதற்கேற்ப மதிப்பீடுகள் தயாரிக்க வேண்டும். ஒரே இடத்தில் அதிக மதிப்பீட்டிலான பணிகள் அவசியம் கருதி எடுக்க நேரிட்டால் அத்தகைய பணிகளுக்கு திருத்திய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உரிய அலுவலரின் நிர்வாக அனுமதி/ தொழில்நுட்ப அனுமதி பெறப்பட வேண்டும். மேலும் ஒப்பந்த விதிகளை பின்பற்றாமல் எந்த பணிகளையும் மேற்கொள்ளக் கூடாது. பூங்கா மேம்படுத்துதல் பணி மேற்கொள்ளப்படும் பொழுது பூங்கா அமைக்கப்படும் மொத்த பரப்பில் ஒரு சதுர அடிக்கான நிதி முதலீடு வரம்பும், கட்டிடப்பணிகள் மேற்கொள்ளப்படும் பொழுது சதுர அடி ஒன்றிற்கான நிதி முதலீடு வரம்பும் அவசியம் பின்பற்றப்பட வேண்டும். சில இடங்களில் ஒரு குறிப்பிட்ட பணியை செய்வதற்கு முன்பாக அந்த இடத்தில் முன்பு செய்யப்பட்ட அதே பணியை மீண்டும் செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட கால வரையறை (Duration Norm) பின்பற்றப்படுவதில்லை, இதனால் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுகிறது. இதற்காக நிர்ணயிக்கப்பட்ட காலவரையறை கண்டிப்பாக பின்பற்றபட வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் அலுவலர்கள் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் பேரூராட்சிகளுக்கு ஏற்படும் இழப்பினை சம்மந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து பிடித்தம் செய்ய உத்திரவிடப்படும்.

மேலும் ரூ10.00 லட்சத்திற்கு மேற்பட்ட பணிகளுக்கான மதிப்பீடுகளை பிரித்து பணிகளை மேற்கொள்வதால், அத்தகைய பணிகளுக்கான மதிப்பீடுகளை மாவட்ட ஒப்பந்த மலர்/ செய்தித்தாள் மற்றும் வலைதளம் ஆகியவற்றில் விளம்பரம் செய்வது மறுக்கப்படுகிறது. இதுவும் விதிகளுக்கு முரணானதாகும். மதிப்பீடுகளை பிரித்து பணிகளை மேற்கொள்வதால், உரிய நிதி வரம்பு அல்லாத, அனுபவமற்ற/ தகுதியற்ற உள்ளூர் ஒப்பந்ததாரர்களுக்கு இத்தகைய பணிகளை வழங்கிட நிர்பந்தப்படுத்தும் நிலை ஏற்படுகிறது. இதனால் பேரூராட்சியின் வளர்ச்சி பாதிக்கும் நிலை ஏற்படுகிறது. இவை தணிக்கைத் தடைகள் எழுப்பப்படுவதற்கான விதி மீறல்கள்/ முறைகேடுகள் ஆகும். மேலும் பேரூராட்சிகளின் நிதியை வீண் விரையம் செய்வதாகும். இத்தகைய நிகழ்வுகளுக்கு சம்மந்தப்பட்டவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு, கடும் தண்டனை வழங்கப்படும். இது போன்ற நிகழ்வுகளில் பேரூராட்சிகளின் ஆய்வாளர்

என்ற முறையில் பேரூராட்சிகளின் ஆணையர், அத்தகைய பேரூராட்சிகளின் நிதி நடவடிக்கைகளை முடக்குவதற்கு சட்டப்படியான நடவடிக்கைகள் பிரயோகிக்கப்படும் நிலை ஏற்படும்.

தங்கள் மண்டலத்திலுள்ள பேரூராட்சிகளில் ஒரே பணிக்கான மதிப்பீட்டினை பல்வேறு மதிப்பீடுகளாக பிரித்து, பேரூராட்சியின் நிதியினை வீண் விரயம் செய்வதற்காக தீர்மானம் இயற்றி செயல்பட்டிருந்தாலோ அல்லது ஒப்பந்த விதிகளை அனுசரிக்காமல் பணிகள் மேற்கொண்டிருந்தாலோ, அவ்வாறான நிகழ்வுகளை ஆய்வு செய்து, மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு கொண்டு சென்று, அத்தகைய தீர்மானங்களை ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும், சம்மந்தப்பட்ட செயல் அலுவலர்கள், உதவி பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள உதவி இயக்குநர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விபரம் குறித்து உதவி இயக்குநர்கள் 15.09.08க்கு முன்பாக அறிக்கையினை அனுப்பி வைக்க அறிவுறுத்தப்படுகிறது.

பேரூராட்சிகளின் குடிநீர் பராமரிப்பு, தெருவிளக்கு மற்றும் பொது சுகாதார இனங்களுக்கு தேவையான பொருட்கள் வாங்குவது (procurement) தொடர்பாக இவ்வாணையரகத்தின் மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகள் செயல் அலுவலர்களால் பின்பற்ற படுவதை உதவிஇயக்குநர்கள் கூர்ந்து கண்காணிக்க வேண்டும். மேலும் இது தொடர்பாக கோரப்பட்ட அறிக்கையினை உடன் அனுப்பி வைக்க வேண்டும்.

**ஒம்/– கே.கோபால்**
ஆணையர்

பெறுநர்

அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்
அனைத்து மண்டல/மாவட்ட உதவி செயற்பொறியாளர்கள்
அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள்